25/-
மாநகராட்சி மன்ற
15-1-1994

# தமிழீழச்சட்டக்கோவையின் திருத்தச் சட்டம்

# 1993

மாநகர
யாழ்ப்பாணம்

## 1993ம் ஆண்டின் 02ம் இலக்கச் சட்டம்

நீதி நிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

# திருத்தச் சட்டம்

இக்கோவையில் அடங்கும் எவையும் பூரண வலுவுடைய தாக அமைவதோடு இவைகளின் ஏற்பாட்டின்படியே தொடர்புடைய விதிகள்பொருள்கொள்ளப்படும். தமிழீழ சட்டக் கோவையில் நடைமுறையில் இருந்து வந்த சில விடயங்கள் நீக்கப்படவும், சில விடயங்கள் திருத்தி அமைக்கப்படுவதற்குமான ஒருசட்டம்.

இச்சட்டம் தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ஒப்புதலின் அடிப்படையில் சட்டமாக்கப்படுகிறது.

இச்சட்டம், 'தமிழீழ சட்டக்கோவையின் திருத்தச்சட்டம்' எனப்படும்.

இது *1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாந் திகதி முதல்* நடைமுறைக்கு வரும்.

01. நீதிமன்ற மொழியும், ஆவணங்களும் நடைமுறையும் பிரிவு 7. பக்கம் 02ன் விடயம் நீக்கப்பட்டு கீழ்வருவன சேர்க்கப்படுகின்றன.

"குடியியல் வழக்குகளின் நிகழ்வுகள், இணைக்கப்பட்ட ஆவணங்கள், தீர்ப்பு, தினக்குறிப்பு ஆகியவற்றின் பிரதிகளை ஒரு பக்கத்திற்கு ரூபா 15/- வீதம் செலுத்தி கட்சிக்காரர்கள் மன்றின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். குற்றவியல் வழக்குகளில் விளக்கம் முடிவுற்ற பின்னரே மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் பிரதிகளை கட்சிக்காரர்கள் பெற்றுக்கொள்ளலாம்."

02. நீதிமன்ற அமைப்பு விதிகள் பக்கம் 08, பிரிவு 21 'அ' வில் குறிப்பிடப்பட்டு இருந்தவை பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

"தகுதி வாய்ந்த விசாரணை அமைப்பினால் (இணக்க மன்றுகள் உட்பட) ஏற்கனவே விசாரணை செய்யப் பட்டு காணப்பட்ட இணக்கம் அல்லது வழங்கப்பட்ட தீர்ப்பு, தீர்வை என்பவற்றை தொடர்புடைய தரப்பினர் ஏற்றுக்கொண்டிருப்பின் அவற்றை நிறைவேற்று

வதற்காகவோ அல்லது மீள்விசாரணை செய்வதற்காகவோ தமிழீழ நீதிமன்றங்களில் தாக்கல் செய்ய இயலாது.

விதிவிலக்கு

தாபரிப்பு வழக்குகள் இவ்விதியுள் அடங்காது.

03. தமிழீழ சட்டக்கோவையின் பக்கம் 15, பிரிவு 16 முற்றாக நீக்கப்பட்டு பின்வரும் விதிகள் சேர்க்கப்படுகின்றன.

" தமிழீழ காவல்துறையினர் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்தால் 48 மணித்தியாலத்துள் தகுதிவாய்ந்த நீதிமன்றின் முன் நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்ய இயலாதவிடத்து அது பற்றிய 'ஆ' அறிக்கையை குறித்த நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் குறித்த நபரைக் கைது செய்த தினத்தில் இருந்து ஏழு (07) நாட்களுக்குள் தகுதிவாய்ந்த நீதிமன்றின் முன் முற்படுத்த வேண்டும். ஆனால் குற்றப்புலனாய்வு தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை நீதியாளரின் முன் அனுமதியுடன் 21 நாட்களுக்கும், தேவை ஏற்படின் மேலும் 21 நாட்களுக்கும் நீதியாளரின் அனுமதியைப்பெற்று தடுத்து வைத்திருக்கலாம்.

04. குற்றவியல் வழக்கு நடவடிக்கை முறைகள் பக்கம் 18, பிரிவு 6 'அ' பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

" தமிழீழ சட்ட விதிகளுக்குட்பட்ட எந்த ஒரு குற்றவியல் வழக்கையும் தனிநபர் எவரும் தனிப்பட்ட வழக்காக நீதிமன்றில் தொடுக்கலாம். ஆயினும் குற்றவியல் வழக்கு நடவடிக்கை முறைகள், விசாரணை நடைமுறைகள் பிரிவு 1ல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை பின்பற்ற முன்பு வழக்காளியை மன்று விசாரித்து குற்றம் ஒன்று புரியப்பட்டுள்ளதாக மன்று காணுமிடத்து பிரிவு 1ன்படி நடவடிக்கைகள் தொடரும்."

05. குடியியல் வழக்கு நடவடிக்கை முறைகள் பக்கம் 19, பிரிவு 1 'அ' வுடன் பின்வரும் விடயம் சேர்க்கப்பட்டுள்ளது.

'' குடியியல் வழக்குச் சம்பந்தமாக சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் என்று கருதும்பட்சத்தில் தமிழீழகாவல்துறையினர் தலையிட்டு சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே சமாதானத்தை ஏற்படுத்துவர். அவ்விதம் சமாதானம் செய்ய முடியாதவிடத்து சம்பந்தப்பட்ட பிணக்கினை நீதிமன்றுக்கு, தமிழீழ காவல்துறையினர் பாரப்படுத்தல் வேண்டும்.''

06. தமிழீழ சட்டக்கோவையின் 'குடியியல் வழக்கு நடவடிக்கை முறைகள்' பக்கம் 19, பிரிவு 1ல் உள்ள உபவிதி 'ஆ'வில் உள்ள ''வழக்கின் பெறுமதியில் 5 சதவீதம் தமிழீழ நிவாரண வரியாகச் செலுத்தி'' என்னும் விடயம் மட்டும் நீக்கப்பட்டு அதற்காக கீழ்வருவன சேர்க்கப்பட்டுள்ளன.

'' தொழில் நீதிமன்ற விண்ணப்பங்கள், விவாகரத்து, தாபரிப்பு, வழக்குகள் தவிர்ந்த ஏனைய குடியியல் வழக்குகளை தாக்கல் செய்யும்போது ஆகக் குறைந்த கட்டணமாக ரூபா 250/- செலுத்தப்படவேண்டும். வழக்கின் பெறுமதி ரூபா 5,000/-ற்கு மேற்படும்போது ஒவ்வொரு 1000/-ற்கும் ரூபா 50/- மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும். ஆயினும் வழக்குப்பெறுமதி ரூபா 20,000/-ற்கு மேற்படும்போது ரூபா 1000 -ற்கு மேலதிகமாக எவ்வித கட்டணமும் செலுத்தப்படத்தேவையில்லை.

07. 'குடியியல் வழக்கு நடவடிக்கை முறைகள்' என்ற தலைப்பின் கீழ்வரும் ''எதிராளிக்கான அழைப்புக்கட்டளை, சாட்சிக்காரருக்கான அழைப்புக்கட்டளை'' (பக்கம் 19 -21) என்பது நான்கு (4) பிரதிகளில் இருந்து இரண்டு (2) பிரதிகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆயினும் மேலதிகமாக மன்றிற்குத்தேவை ஏற்படின் உரியவரிடம் இருந்து அதனைப் பெற்றுக்கொள்ளும்.

08. 'குடியியல் வழக்குநடவடிக்கை முறைகள்' பக்கம் 19, பிரிவு 1, 'இ' வில் கூறப்பட்ட ''நீதிமன்றில் ஒப்படைக்கப்படும் பிரதிகள் யாவும் சட்ட அறிஞரால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்'' என்பதுடன் ''சட்ட அறிஞர் ஏற்படுத்தப்படாத வழக்குத் தொடுப்பவரால் நீதிமன்றில் ஒப்படைக்

க்கப்படும் பிரதிகள் யாவும் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் போதுமானது.'' என்பது சேர்க்கப்பட்டுள்ளது

09. குடியியல் தவறுகளும், நிவாரணங்களும் பக்கம் 25, பிரிவு5' 'அ' வுடன் பின்வருவன சேர்க்கப்பட்டுள்ளன.
''18 வயதுடைய ஆணும், 16 வயதுடைய பெண்ணும், தத்தமது பெற்றோரது அல்லது தத்தமது பாதுகாவலரின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ளலாம்''

10. தமிழீழச் சட்டக்கோவை பக்கம் 25ல் குடியியல் தவறுகளும், நிவாரணங்களும் என்னும் விடயத்தில் அடங்கும் பிரிவு 5, 'ஆ,ா'குற்றவியல் விடயமாகக்கொள்ளப்படுகிறது.

11. குடியியல் தவறுகளும், நிவாரணங்களும் பக்கம் 26, பிரிவு5, 'இ' வின் முதலாவது பந்தி பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

'' 'இ' 2வது பந்தி முற்றாக நீக்கப்படுகிறது''

ஒரு ஆணும், பெண்ணும் திருமணம் முடிப்பதாக உடன்பட்டு திருமணப்பதிவு செய்து கொண்ட பின்னர் நியாயமற்ற எக்காரணத்தைக் கொண்டாவது பகுதியினர் எவராவது குடும்பமாக சேர்ந்து வாழமறுத்தால் ரூபா. 5,000/-ற்கு குறையாத இழப்பீட்டையும், விவாகரத்தையும் பெறத் தகுதியுடையவர்.

12. தமிழீழ சட்டக்கோவையின் பக்கம் 31ல் காணப்படும் 'திருமண ஏமாற்றம்' என்னும் பகுதியின் பிரிவு 3 ற்கான தண்டனையில் ''தகப்பனின் சொத்தில் பிள்ளைக்கு அரைப்பங்கு'' என்னும் அம்சம் நீக்கப்படுகிறது.

13. தமிழீழகுற்றப்பொறுப்புக்களும், தண்டனைகளும் பக்கம்33, பிரிவு 1, பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ''திருட்டு,கொள்ளை'' | சம்பந்தப்பட்ட பொருள் அல்லது பெறுமதிஇழப்பீடாகவும், அத்துடன் ரூபா 100/-ற்கு குறையாத குற்றப்பணம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும். |

14. தமிழீழ சட்டக்கோவை பக்கம் 10 பிரிவு '6' உப பிரிவு 'அ' பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகிறது.
''குற்றவியல் வழக்குகளிற்கான நீதிமன்றின் அழைப்புக் கட்டளைக்கு அமைய வருகை தரத் தவறும் எவருக்கு எதிராகவும் நீதிமன்றம் பிடியாணை விடுக்கலாம்''

15. தமிழீழ சட்டக்கோவை பக்கம் 12 பிரிவு '8' உப பிரிவு 'ஆ' இல் காணப்படும் ''நியாயமான காலத்தினுள்'' என்னும் அம்சம் நீக்கப்பட்டு அதற்காக ''21 நாட்களுக் குள்'' என்னும் விடயம் சேர்க்கப்படுகிறது.

16. குடியியல் தவறுகளும் நிவாரணங்களும் பக்கம் 26 பிரிவு '5' உப பிரிவு 'ஈ' பராமரிப்புப் பணம் என்பதற்கான ஏற் பாட்டுடன் பின்வரும் ஏற்பாடும் சேர்க்கப்படுகின்றது.
''சட்டமுறையல்லாத வழியில் பிறந்த 21 வயது நிரம்பாத பிள்ளைகட்கு தந்தை இன்னார் என நிருபிக்கப்படும் பட்சத் தில் அத்தந்தையிடம் இருந்து குறித்த பிள்ளைக்கு நீதிமன் றம் நியாயமாகக் கருதும் பராமரிப்புப் பணத்தை பெற்றுக் கொடுக்கும்''

17. தமிழீழ குற்றப்பொறுப்புக்களும், தண்டனைகளும்பக்கம்35, பிரிவு 14,15ன்- குற்றப்பணம் ரூபா 500/- ற்கு குறையாத குற்றப்பணமாக மாற்றப்பட்டுள்ளது.

18. 'தமிழீழ குற்றப்பொறுப்புக்களும் தண்டனைகளும்' என்ப தில் கீழ்வருவன புதிய குற்றங்களாக இணைக்கப்பட்டுள் ளது.

| | |
|---|---|
| 31. சமூக ஒழுக்கக்கேடு | ரூபா 500/-ற்கு குறையாத குற்றப்பணம் அல்லது இரண்டு (02) வருடத்திற்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும். |
| 32. 'அ' அனுமதியளிக்கப் பட்ட போதையூட்டும் குடிவகைகளை அவ்வக் காலங்களில் குறிக்கப் பட்ட ஒழுங்கு விதி களை மீறி உற்பத்தி செய்தல், கடத்தல் என்பவற்றிற்கு | ரூபா 100/-ற்கு குறையாத குற்றப் பணம், |

| | |
|---|---|
| 'ஆ' அனுமதியளிக்கப் படாத போதையூட்டும் குடிவகைகளை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், கடத்துதல் பாவனை. | இதற்கான தண்டனை ஏற்பாடுகள் தமிழீழ குற்றப்பொறுப்புக்களும் தண்டனைகளும் பிரிவு 14, 15க்கு அமைய கணிக்கப்படும். |

19. தமிழீழச் சட்டக்கோவை பக்கம் 13 'பிரிவு 11 குற்றப்பிரிவு' என்பதன் உபபிரிவு 'அ, 35 ஏனையவை' என்பதுடன் ''சமூகநீதிக்கு மாறான செயல்கள்'' என்னும் விளக்கம் சேர்க்கப்படுகிறது

20. தமிழீழ சட்டக்கோவையில் 55ம், 56ம் பக்கங்களில் காணப்படும் அழைப்பாணை மாதிரிப்படிவம் நீக்கப்பட்டுள்ளது. உரிய படிவங்கள் தமிழீழ நீதிமன்றங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

21. தமிழீழ குற்றப் பொறுப்புகளும் தண்டனைகளும் பகுதியில் 'பக்கம் 37' ல் 30வது பிரிவை அடுத்துக் காணப்படும் விடயமான* ''தண்டப்பணம் செலுத்த முடியாத ஒருவர் ஏழு (7) நாட்களுக்கு குறையாத ஐந்து (5) ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு கட்டாய சமூக சேவை புரியுமாறு கட்டளையிடப்படுவார்'' என்பதில் உள்ள ''ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத'' என்னும் விடயம் நீக்கப்படுகிறது.

□□

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

08. ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத்தாபனங்கள், பொது அமைப்புக்களின் மோட்டார் ஊர்திகளைப் பதிவுக்குட் படுத்தல்.

ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத்தாபனங்கள், பொது அமைப்புக்களின் மோட்டார் ஊர்திகள் அனைத்தும் அவ் அரச, அரச கூட்டுத்தாபனங்கள், பொது அமைப்புக்களின் பெயரிலேயே பதிவுக்குட்படுத்துதல் வேண்டும். ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத்தாபனங்களாயின் பொறுப்புவாய்ந்த அதிகாரி (தலைவர்), பொது அமைப்பாயின் தலைவரும் செயலாளரும் அல்லது அவ்வமைப்பின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட இருவர் தமிழீழ மோட்டார் ஊர்திப்படிவத்தில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவதுடன், தமது பதவி முத்திரையையும் இடுதலுடன் குறித்த ஊர்தியைப் பதிவுக் குட்படுத்துதல் வேண்டும்.

**விளக்கம்**

முற்றுமுழுதாக ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத்தாபனங் கள், பொது அமைப்புக்களின் பெயரில் பதிவுக்குட்படுத் தப்பட்ட ஊர்திகள், ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத் தாபனங்கள், பொது அமைப்புக்களின் ஊர்திகள் என்று அழைக்கப்படும். முற்றுமுழுதாக ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத்தாபனங்கள், பொது அமைப்புக்களின் தேவை களுக்கு மட்டும் பாவிக்கப்படும் அல்லது ஈடுபடுத்தப் படும் மோட்டார் ஊர்திகள் எக்காரணங்கொண்டும் ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத்தாபனங்களின் அல்லது பொது அமைப்புக்களினால், அதன் தலைவர் அல்லது வேறு எவரேனும் ஒருவர் அல்லது குழுக்களின் பெயரில் பதிவுக்குட்படுத்தலாகாது.

09. ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத்தாபனங்களால் அல்லது பொது அமைப்புக்களினால் ஆவ்வவ் அரச, அரச கூட் டுத்தாபனம், பொது அமைப்புக்களின் வேலைகளை இலகுவாக்குவதற்கு அல்லது துரிதமாக முடிப்பதற்கு அல்லது பிறகாரணங்களுக்காக அங்கு பணிபுரியும் நபர் ஒருவருக்கு கடன் அடிப்படையில் அல்லது நன்கொடையாக வழங்கப்பட்ட மோட்டார் ஊர்தியை அந்நபர் தனது பெயரிலேயே பதிவுக்குட்படுத்தலாம்.

விளக்கம்

பதிவுக்குட்படுத்தப்படுவதற்கு, உரிய திணைக்களம் அல்லது உரிய பொதுநிறுவன அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட உறுதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஸ்ரீலங்கா அரச, அரச கூட்டுத்தாபனங்கள், பொது அமைப்புக்கள், கடன் அடிப்படையில் ஒரு நபருக்கு வழங்கிய ஊர்தியைக் கடன்செலுத்தி முடியும்வரை பதிவுப்புத்தகத்தில் முன்னுரிமையுடைய அமைப்பின் பெயர் குறிப்பிடப்படுதல்வேண்டும்.

## ஆண்டுவரி அனுமதிப்பத்திரம்

10. பதிவு செய்யப்பட்ட உரிமையாளரினால், பதிவு செய்யப்பட்ட ஊர்தியானது அடுத்துவரும் ஆண்டில் பாவிக்கமுடியாத (தெரு வீதியில்) நிலையில் இருக்குமானால் அதுபற்றி நடப்பு ஆண்டின் மார்கழி 31-ம் திகதி அன்றோ, அதற்கு முன்போ குறிப்பிட்ட படிவத்தின் மூலம் தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவாளருக்கு அறிவிக்கவேண்டும். அப்படிச் செய்யத் தவறும் பட்சத்தில் அவ்வூர்திக்குரிய ஆண்டுவரி அனுமதிக்கான கட்டணத்தைச் செலுத்தவேண்டும். அவ்வாறு செய்யத்தவறுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

11. ஓர் ஊர்தியின் அடிச்சட்டம், இயந்திரம் ஆகியன தவிர்ந்த ஏனைய ஊர்திகள் தொடர்பில் தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவாளரினால் வரையறுக்கப்பட்ட ஆண்டு வரி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத ஊர்திகள் எதையும் தெரு வீதிகளில் பாவிப்பது அல்லது செலுத்திச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

12. தமிழீழத்தில் பதிவுக்குட்படுத்தப்பட்ட ஊர்தி வகைகளும், ஆண்டுக்கான வரியனுமதிப்பத்திரக் கட்டணமும் கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கும்.

| | | |
|---|---|---|
| 01. மோட்டார் கார் | | ஆண்டு வரி அனுமதிப்பத்திர கட்டணம் (அரசிறை உரிமம்) |
| | அ. நோயாளர் ஊர்தி | ரூபா 1000/- |
| | ஆ. பிரேத ஊர்தி | ரூபா 1000/- |

இ. ஜீப்வண்டி ரூபா 1000/-

ஈ. ஏனைய பிரத்தியேக பிரயாண ஊர்திகள் (சாரதி உட்பட 9 ஆசனங்களைக்கொண்டது) ரூபா 1000/-

02. லொறி

அ. சிறிய லொறி (எல்வ் ஆயின் ஆறு சில்லுகளுக்கு உட்பட்டது) ரூபா 2000/-

ஆ. நடுத்தர லொறி நான்குசில்லு களுக்கு உட்பட்டது ரூபா 3000/-

இ. பெரிய லொறி நான்கு சில்லு களுக்கு மேற்பட்டது ரூபா 5000/-

03. விவசாய உபயோக ஊர்திகள்

அ. உழவு இயந்திரம் ரூபா 500/-

ஆ. உழவு இயந்திர இழுவை வண்டி (ரெயிலர்) ரூபா 350/-

இ. இரு சக்கர இழுபொறி ஊர்தி (கை உளவு இயந்திரம்) ரூபா 300/-

ஈ. இரு சக்கர இழுவை வண்டி (இழுவை வண்டி சிறியது) ரூபா 200/-

04. பொதுமக்கள் பிரயாண ஊர்தி

அ. வான் (சாரதி உட்பட 14 ஆசனங் களுக்கு உட்பட்டது) ரூபா 1500/-

ஆ. மினிபஸ் (சராதி உட்பட 29 ஆசனங்களுக்கு உட்பட்டது) ரூபா 2000/-

இ. பேருந்து (சாரதி உட்பட 29 ஆசனங்களுக்கு உட்பட்டது) ரூபா 2500/-

05. மோட்டார் சைக்கிள், முச்சக்கர ஊர்தி

அ. மோட்டார் சைக்கிள் ரூபா 200/-

ஆ. முச்சக்கர ஊர்தி (ஆட்டோ) ரூபா 500/-

13. பிரிவு 3ன் படி மோட்டார் ஊர்தியையோ அல்லது அடிச் சட்டத்தையோ அல்லது இயந்திரத்தையோ பதிவு செய்து கொள்ளத்தவறும் எவரும் தமிழீழ மாவட்ட நீதிமன்றின் முன்பாக சுருக்க முறை விளக்கத்திற்கு முற்படுத்தப்பட்ட

தன் பின்னர் ரூபா 500/- ற்கு மேற்படாத குற்றப்பணம் தண்டனையாக விதிக்கப்படும் அத்துடன் குறித்த தவறை இளைப்பவர் தனது ஊர்திக்கான பதிவுக்கட்டணத்தை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் செலுத்தி மோட்டார் ஊர்தியைப் பதிவுசெய்து, அதற்கான பற்றுச் சீட்டினை பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

14. பிரிவு 10லும், 11லும் குறிப்பிட்டவாறான குற்றத்தை புரியும் எவரும், குறித்த ஊர்திக்கான செலுத்தப்படாத ஆண்டு வரி அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்த வேண்டும் என்பதுடன் அதே அளவு தொகைக் குற்றப் பணம் அல்லது பொருத்தமான காலத்திற்குக் கட்டாய சமூக சேவை தண்டனையாக விதிக்கப்படும்.

15. ஏதாவது தவறொன்றுக்கு இச்சட்டத்தில் குறிப்பாக எத் தண்டனையும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிராதவிடத்து, அந்தத் தவறிற்கு குற்றவாளியாகவுள்ள எவரேனும் ஒருவர் தமிழீழ மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் அல்லது விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல் ரூபா 200/- ற்கு மேற்படாத குற்றப்பணமும், இரண்டாவது தடவையாகவும் அதேகுற்றம் புரிந்தாரெனில் அதற்காகப் பின்னடுத்த தடவையாக குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டால், ரூபா400/- ற்கு மேற்படாத குற்றப்பணம் அல்லது பொருத்தமான ஒரு காலத்திற்கு கட்டாய சமூகசேவை தண்டனையாக விதிக்கப்படும்.

16. எவரேனும் ஆளொருவர் மோட்டார் ஊர்தி ஒன்று தொடர்பாக ஏதேனும் அடையாளத் தகட்டினை, பதிவுச்சான்றிதழை, ஆண்டு வரி அனுமதிப்பத்திரத்தினை அல்லது மோட்டார் ஊர்திப்பதிவாளரினால் வழங்கப்பட்ட வேறு ஏதாவது அனுமதிப்பத்திரங்களை அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் ஒழுங்கு விதியின்கீழ் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கொள்ளப்படும் அத்தகைய அனுமதிப்பத்திரத்தினை, சான்றிதழை உரிமத்தின் இணைப்பிரதியை மோசடியாக பயன்படுத்துகின்ற அல்லது வேறு நபர் அதனைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்ற அல்லது அழிக்கின்றதானதொரு செயல் குற்றமான செயலாகும். இக்குற்றங்களில் ஒன்றினையோ அல்லது பலவற்றையோ புரியும் எவருக்கும் ரூபா 1000/-

வரையிலான குற்றப்பணம் அல்லது ஒருவருட காலம்வரை கட்டாய சமூகசேவை அல்லது இவை இரண்டும் தண்டனை யாக விதிக்கப்படும்.

17. மோட்டார் ஊர்தி உரிமைமாற்றம்

1. தமிழீழப் பிரதேசத்தில் பதிவுக்குட்படுத்தப்பட்ட மோட்டார் ஊர்தியின் பதிவுசெய்யப்பட்ட உரிமை யாளர் தானாகவே இன்னொருவருக்கு அத்தகைய தொரு கைமாற்றம் செய்வதன்மூலம் உரிமைமாற்றம் செய்யும்போது, அப்படியானதொரு உரிமைமாற்றம் செய்யப்பட்டதன் பின்பு '7' (ஏழு) நாட்களுக்குள்ளாக அதற்குரிய படிவம் 8-ல் அவ்வூர்திக்கான ஆண்டுவரிப் பத்திரத்துடன் தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவாள ருக்கு நேரிலே கையளித்தல் வேண்டும் என்பதுடன், அவ்வூர்திக்கான பதிவுச்சான்றிதழ் அல்லது அதன் இணைப்பிரதியைப் புதிய உரிமையாளரிடம் ஒப்படைத் தல் வேண்டும்.

2. அவ்வாறான மோட்டார் ஊர்தியின் புதிய உரிமை யாளர், அவ்வூர்தியின் புதிய உரிமையாளராகப் பதிவு செய்யப்பட்டாலன்றி அத்தகைய உரிமைமாற்றத்தின் பின்னர் 30 நாட்கள் கழிந்ததின்மேல் அவ்வூர்தியைப் பயன்படுத்துதலாகாது. அவ்வாறு பயன்படுத்துவது அல்லது தனது உடமையில்வைத்திருப்பது தண்டனைக் குரிய குற்றமாகும்.

18. புதிய உரிமையாளரைப் பதிவுசெய்தல்

1. மோட்டார் ஊர்தியொன்று கைமாற்றம் செய்யப் பட்டதன்மேல் 14 நாட்களுக்குள்ளாக அதற்குரிய படிவம் ''மோட்டார் ஊர்தி 09'' இன்மூலம் புதிய உரிமையாளர் தனது பெயரில் பதிவுசெய்துகொள்வ தற்காகத் தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

2. அவ்வூர்திக்கான பதிவுச்சான்றிதழ் அல்லது அதன் இணைப்பிரதியினை மோட்டார் ஊர்திப்பதிவாளருக்கு அனுப்புதல்வேண்டும்.

3. அவ்வூர்திக்கான பதிவுமாற்றத்திற்காக விதிக்கப்பட்ட கட்டணத்தையும் புதிய உரிமையாளர் செலுத்தியிருக்க வேண்டும்.

4. அவ்வூர்திக்கான ஆண்டுவரி அனுமதிப்பத்திரம் அல்லது அதன் இணைப்பிரதி புதிய உரிமையாளரால் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் அல்லது அத்தகைய ஆண்டு வரி அனுமதிப்பத்திரம் எதுவும் இல்லாதிருப்பின் அத்தகைய ஆண்டுவரி அனுமதிப்பத்திரம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஒன்று அல்லது அத்தகைய ஊர்தி தொடர்பாக இச்சட்டத்தின் 10-ம் பிரிவின் கீழான பயன்படுத்தாமைபற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதென, தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ஒன்று மோட்டார் ஊர்திப்பதிவாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

05. மோட்டார் ஊர்தி ஒன்றின் புதிய உரிமையாளரைப் பதிவு செய்ததன்மேல் பதிவுச்சான்றிதழில் அல்லது அதன் இணைப்பிரதியில் வேண்டிய திருத்தங்களை செய்து அதனை புதிய உரிமையாளரிடம் நேரில் ஒப்படைத்தல்வேண்டும்.

06. அந்த மோட்டார் ஊர்தியின் ஆண்டுவரி அனுமதிப்பத்திரத்திலும் அவசியமான திருத்தங்களைச் செய்து புதிய உரிமையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

07. மேற்கூறிய பிரிவு 18 (1) தொடக்கம் 18 (4) வரையிலான நிபந்தனைகளுக்குள் அமையாத மோட்டார் ஊர்தி எதனையும் உரிமை மாற்றத்தின்பின்னர் புதிய உரிமையாளரின் பெயரில் பதிவுக்குட்படுத்தலாகாது.

19. உரிமை மாற்றத்தின்மேல் புதிய உரிமையாளரை பதிவு செய்வதற்கான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| 01. | மோட்டார் கார் | ரூபா 650/- |
| 02. | லொறி | ரூபா 800/- |
| 03. | விவசாய உபயோக ஊர்திகள் | ரூபா 300/- |
| 04. | பொதுமக்கள் பிரயாண ஊர்திகள் | ரூபா 750/- |
| 05. | மோட்டார் சைக்கிள் | ரூபா 100/- |
| 06. | மூச்சில்லு வாகனம் | ரூபா 350/- |

20. அடையாளம் காட்டும் தகடு, ஊர்தியின் முன்னுக்கும், பின்னுக்கும் பொருத்தப்பட்டு இருத்தல்வேண்டும். அப்படிப் பொருத்தப்படாது தெரு, வீதி எதிலும் ஊர்தி ஒன்றினை செலுத்திச் செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

21. மோட்டார் ஊர்தி ஒவ்வொன்றிலும் பொருத்தப்பட வேண்டிய அடையாளம் காட்டும் தகடுகளின் மாதிரி.

01. எல்லா ஊர்திகளிலும் பொருத்தப்படும் அடையாளம் காட்டும் தகடுகளின் மேற்பரப்பு முழுவதிலும் ''மஞ்சள்'' வர்ணம் தீட்டப்பட்டு இருத்தல்வேண்டும். இதில் பொறிக்கப்படும் அடையாளம் காட்டும் எழுத்துக்கள், எண்கள் யாவும் ''கறுப்பு''; வர்ணத்தில் பொறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

02. அடையாளம் காட்டும் தகடுகளில் பொறிக்கப்படும் எண்கள், எழுத்துக்கள் யாவும் ஒரே அளவுடையதாக இருத்தல் வேண்டும்.

03. மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய ஊர்திகளில், பொருத்தப்பட்டு இருக்கும் அடையாளம் காட்டும் தகடுகளில் பொறிக்கப்படும் அல்லது எழுதப்படும் எழுத்துக்கள் அல்லது எண்கள் என்பவற்றின் உயரம் $3\frac{1}{2}''$ (அங்குலத்திற்கு) குறையாமலும் எண்கள், எழுத்துக்கள் ஆகிய ஒவ்வொன்றினதும் அகலம் (தடிப்பு) $\frac{5}{8}''$ (அங்குலத்திற்கும்) குறையாமலும் இலக்கம் '1' ஐ தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு எண்ணிற்கும் அல்லது எழுத்திற்கும் எடுக்கக்கூடிய இடத்தின் பிரமாணம் (அளவு) $2\frac{1}{2}''$ (அங்குலத்திற்கு) குறையாமலும் இருத்தல்வேண்டும்.

04. மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய ஊர்திகளின் எண்கள் அல்லது எழுத்துக்கள் ஆகியனவற்றிற்கு இடையில் குறைந்தது $\frac{1}{2}''$ (அங்குல) இடைவெளியாவது இருத்தல்வேண்டும். அடையாளம் காட்டும் எண்கள் அல்லது எழுத்துக்கள் எழுதப்படும்பொழுது மேலும் கீழும் $\frac{1}{2}''$ (அங்குல) இடைவெளியாவது இருத்தல்வேண்டும். தகட்டின் முன்னும், பின்னும் $1''$ (அங்குல) இடைவெளியாவது இருத்தல் வேண்டும். இரண்டு வரிகளில் எழுதப்படும்போது இரண்டு வரிகளுக்குமிடையில் $3/4''$ (அங்குல) இடைவெளியாவது இருத்தல் வேண்டும்.

05. அடையாளம் காட்டும் தகடுகளில் எழுதப்படும் எழுத்துக்களுக்கும், எண்களுக்கும் இடையில் $1\frac{1}{2}''$ (அங்குல) இடைவெளியாவது இருத்தல் வேண்டும்.

06. மோட்டார் (சைக்கிள்), ஊர்தியில் பொறிக்கப்படும் எழுத்துக்கள் அல்லது எண்கள் ஆகிய ஒவ்வொன் றினதும் உயரம் $2\frac{1}{2}''$ (அங்குலத்திற்கு) குறையாமலும், எண் 1ஐ தவிர்ந்த ஏனைய எழுத்துக்கள் அல்லது எண் கள் ஆகிய ஒவ்வொன்றினதும் அகலம் (தடிப்பு) $\frac{2}{5}''$ (அங்குலத்திற்கு) குறையாமலும் எண் 1 ஐ தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு எண்ணிற்கும் அல்லது எழுத்திற் கும் எடுக்கக்கூடிய இடத்தின் பிரமாணம் (அளவு) $1\frac{4}{5}''$ (அங்குலத்திற்கு) குறையாமலும் இருத்தல் வேண்டும்.

07. மோட்டார் (சைக்கிள்) ஊர்தியில் பொறிக்கப்படும் எழுத்துக்கள் அல்லது எண்களுக்கு இடையிலான இடைவெளி $1\frac{2}{5}''$ (அங்குலத்திற்கு) குறையாமலும், அடையாளம் காட்டும் தகட்டின் எண்கள் அல்லது எழுத்துக்கள் எழுதப்படும்பொழுது மேலும், கீழும் முன்னும், பின்னும் $\frac{1}{2}''$ (அங்குல) இடைவெளி யாவது இருத்தல்வேண்டும். இரண்டு வரிகளில் எழு தப்படும்பொழுது இரண்டு வரிகளுக்குமிடையில் $\frac{3}{5}''$ (அங்குல) இடைவெளியாவது இருத்தல்வேண்டும்.

08. ஊர்திகளில் பொருத்தப்பட்டு இருக்கும் அடையாளம் காட்டும் தகடுகள் யாவும் பகல் நேரத்தில் சாதாரண கண்பார்வை உடைய ஒருவர் 50 யார் தூரத்தில் நின்று பார்க்கும்போது தெரியக்கூடியதாக எண் கள், எழுத்துக்கள் யாவும் தெளிவாக எழுதப்பட்டு ஊர்திகளில் முன்னுக்கும் பின்னுக்கும் பொருத்தப் பட்டு இருத்தல்வேண்டும்.

09. இச்சட்டத்தின் பிரிவு '20'ல் முன்னும், பின்னும் அடை யாளம் காட்டும் தகடுகள் பொருத்தப்பட்டு இருக்க வேண்டுமென்று கூறப்பட்டு இருந்தபோதிலும், எவ்வா றாயினும் அடையாளம் காட்டும் தகடு ஒன்றுக்குப் பதி லாகவிடயத்திற்கு ஏற்றவாறு அடையாளம் காட்டும் தகடுகள் பொருத்தப்படக்கூடிய அதற்கென ஒதுக்கப் பட்டுள்ள இடங்களில் 21 (1) ல் கூறப்பட்டுள்ளவாறு மஞ்சள் நிற மையினால் வர்ணம் தீட்டப்பட்டு அதன் மேல் தமிழீழ ஊர்திப் பதிவாளரினால் அவ்வூர்திக்கு பிரித்துக்கொடுக்கப்பட்ட அடையாளம் காட்டும் எண்கள் அல்லது எழுத்துக்கள் கறுப்பு நிற மையினால் எழுதப்படலாமெனவும் விதந்துரைக்கப்படுகிறது.

22. தமிழீழ காவற்றுறையில், போக்குவரத்துக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காவற்துறை அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் விதந்துரைக்கப்பட்ட தவறுகளை புரிபவர்மீது அவ்விடத்திலேயே, இச்சட்டத்தில் கூறப்பட்டவாறான குற்றப்பணத்தினை, அதற்குரிய பற்றுச் சீட்டு ஒன்றினை வழங்குவதன்மூலம் அறவிடப்படலாமென இச்சட்டத்தினால் விதந்துரைக்கப்படுகின்றது.

| தொடர்புடைய தவறுகள் | அவ்விடத்திலேயே அறவிடக் கூடிய குற்றப்பணத்தொகை |
|---|---|
| 1. அடையாளம் காட்டும் தகடு | ரூபா 25/- |
| 2. ஆண்டு வரி அனுமதிப் பத்திரம் | ரூபா 25/- |
| 3. பெருவழியில் மோட்டார் ஊர்திகளை நிறுத்துதல் அல்லது நிறுத்தி வைத்தல் | ரூபா 50/- |
| 4. அடையாளம் காணல் தகட்டின் வடிவம் | ரூபா 25/- |

தேசிய நூலகப் பிரி
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

## மோட்டார் ஊர்திகள் தொடர்பான படிவங்கள்

i. மோட்டார் ஊர்திக்கான உறுதிச்சான்றிதழ் இருப்பின் தமிழீழ பதிவுப் படிவம் (மோ. ஊ. 01)
ii. மோட்டார் ஊர்திக்கான உறுதிச்சான்றிதழ் இல்லாவிடின் தமிழீழ பதிவுப் படிவம் (மோ. ஊ. 02)
iii. மோட்டார் ஊர்தி உரிமையாளர் மரணம் பற்றி அறிவித்தல் படிவம் (மோ. ஊ. 03)
iv. மோட்டார் ஊர்திப் பதிவுப் புத்தகத்தின் நகலுக்கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 04)
v. மோட்டார் ஊர்தி அடிச்சட்டம் அல்லது இயந்திரம் வைத்திருப்பதற்கான தமிழீழ படிவம் (மோ. ஊ. 05)
vi. மோட்டார் ஊர்தி வரி விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 06)

vii. மோட்டார் ஊர்தி வரி அட்டை நகலுக்
கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 07)

viii. மோட்டார் ஊர்தி மாற்றிக்கொடுப்பதற்
கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 08)

ix. மோட்டார் ஊர்தி கொள்வனவின் பின்
தமிழீழ பதிவிற்கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 09)

x மோட்டார் ஊர்திப் பதிவுகளை நீக்குவதற்
கான விண்ணப்பப்படிவம் (மோ. ஊ. 10)

xi. தமிழீழ மோட்டார் ஊர்தி வருடாந்த வரி
பணவரவுச் சான்றிதழ் (மோ. ஊ. 11)

xii தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பண
வரவுச் சான்றிதழ் (மோ. ஊ. 12)

xiii. இயந்திரம் / அடிச்சட்டம் வைத்திருப்பதற்
கான தமிழீழ அனுமதிப்பத்திரம் (மோ. ஊ. 13)

xiv. தமிழீழ மோட்டார் ஊர்திப் பரிசோதகரின்
சான்றிதழ் (மோ. ஊ. 14)

xv. தமிழீழ மோட்டார் ஊர்தி வருடாந்த வரி
செலுத்துதற்கான பணவரவுச் சான்றிதழ் (மோ. ஊ. 15)

xvi. அடிச்சட்டம் / இயந்திரம் பதிவுப் பணவர
வுப் பற்றுச்சீட்டு (மோ. ஊ. 16)

xvii. தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் படிவ
விநியோகச் சான்றிதழ் (மோ. ஊ. 17)

xviii. ஊர்திகளைச் சென்று பரிசோதனை செய்
வதற்கான பணவரவுச் சான்றிதழ் (மோ. ஊ. 18)

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலகச் சேவை
யாழ்ப்பாணம்.